# கோட்டையை மீட்கத் தவறிய படையினர் கிழக்கு மாகாணம் அனுப்பப்பட்டனர்

கோட்டையைக் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்ட சுமார் இரண்டாயிரம் துருப்பினரும் கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர். என ராணுவத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நேற்றுத்தெரிவித்தார். ''ஒப்பரேஷன் போட்'' என்ற இந்தக்கோட்டை மீட்பு முயற்சியில் ஈடுபட்டவர்கள் கிழக்குப்பகுதியில் ரோந்துப் பணிகளில் ஈடுபட அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் கோட்டையை ராணுவம் மீட்டிருந்தால் வட பகுதியில் ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதில் எமக்குச் சுலபமாக இருந்திருக்கும். கோட்டையைக்கைப்பற்ற மண்டைதீவில் ஆறு படைப்பிரிவுகளை அனுப்பியிருந்தோம், எனினும் ராணுவத்தரப்பில் ஆள் இழப்பும் ஆயுதவிரயமுமே அதிகமாக ஏற்பட்டது. அத்துடன் கோட்டை அமைந்திருந்த பகுதியும் நிலவியல் ரீதியாக எமக்குச் சில பிரச்சினைகளை ஏற்படுத்தியது என ராணுவத்தளபதி குறிப்பிட்டார். (து)

பக்கங்கள் நான்கு    விலை ரூபா- 3-50

முரசொலி

முரசு 04 ஒலி 244 திங்கள் 15-10-1990 (புரட்டாதி 29) ற.அவ்வல் 25

# படுபயங்கரக் குண்டு வீச்சு

# ஐவர் மடிவு; பலர் படுகாயம்

## நேற்றுப் பல லட்ச ரூபா உடைமைகள் சேதம்

ஸ்ரீலங்கா விமானப்படையின் குண்டுவீச்சுவிமானங்கள் நேரங்கள் மாறுபட்டநிலையில் நிகழ்த்திய அசுர வேகத் தாக்குதல்களில் மூன்று சிறுவர்கள் உட்பட ஐவர் மரணமாகினர். பதினைந்து பேர் படுகாயமுற்றனர். இவர்களில் சிலரின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது என அறிவிக்கப்படுகிறது. இக் குண்டு வீச்சுக்களினால் பல இலட்சக் கணக்கான ரூபா பொருள் நஷ்டமும் ஏற்பட்டுள்ளது. எவரும் சற்றேனும் எதிர்பார்த்திராதவகையில் நிகழ்ந்துள்ள இந்த மிலேச்சத்தனமான தாக்குதல்கள் ஏற்கனவே வான் ஊடான அனர்த்தங்களால் நிலைகுலைந்து போயுள்ள மக்களை மேலும் வருத்துவதாக உள்ளது.

## திருநெல்வேலியில் விளைந்த விபரீதம்

திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் இரண்டாவது தடவையாக நேற்றுப் பிற்பகல் இரண்டுமணிக்கு இரண்டு பொம்மர்கள் மாறி மாறித் தாக்குதல்களை நடாத்தின.

இத்தாக்குதல்களின் போது திருநெல்வேலி கூட்டுறவுச் சங்கக் கிளை நிலையத்தில் நிவாரணப் பொருட்களை வாங்குவதற்காக நின்று கொண்டிருந்த திருநெல்வேலி மாரியம்மன் வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் இராஜராஜேஸ்வரணி (வயது 31) ஸ்தலத்திலேயே மாண்டார். சைமன் சில்கோ (வயது 65) என்பவர் மானிப்பாய் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்,

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சியிலும் கோரத் தாண்டவம்

வடமராட்சியில், உடுப்பிட்டி பருத்தித்துறை ஆகிய இடங்களில் நேற்று பொம்மர்கள் தம் கோரப் பார்வையைத் திருப்பின.

மூன்று சிறுவர்கள் இதன் விளைவால் உயிரிழந்தனர். அறுவர் படுகாய முற்றனர். அவர்கள் ஜீவமரணப் போராட்டம் நடத்துவதாகக் கூறப்படுகிறது. மருத்துவமனையில் அவர்களுக்குஅவசர சிகிச்சைகள் துரிதகதியில் மேற் கொள்ளப்பட்டுவருகின்றன.

இக்குண்டு வீச்சு விபரீதத்தால் மூன்று கடைகள், மூன்று வீடுகள, தேவாலயம் ஆகியன பெருத்த சேதத்திற்குள்ளாகின, கால்நடைகள் சிலவும்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## அரியாலையில் பாடசாலை மீது தாக்கு

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் அரியாலைப் பகுதியைச் சுற்றி வட்டமிட்ட இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையை நோக்கிக் குண்டுகளை வீசின.

குண்டு வீச்சு விமானத்தைக் கண்டதும் மக்கள் பதுங்கு குழிகளில் பதுங்கிக் கொண்டதால் உயிர்ச் சேதங்களோ காயங்களோ இன்றித் தப்பிக் கொண்டனர்.

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலைக் கட்டிடமும், பாடசாலைக்குக்கிழக்குப் புறமாக அமைந்துள்ள வீடும் பாரிய சேதத்துக்குள்ளாகின வித்தியாசாலை விஞ்ஞான கூடமும் சிறிது சேதமுற்றது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## பாடசாலையில் வெள்ளை - நீலக் கொடி பறக்க விடுமாறு கோரிக்கை

இன்று பாடசாலைகள் யாவும் திறக்க இருப்பதை அடுத்து யாழ் மாவட்டப் பாடசாலை அதிபர்கள் பின் வரும் பாதுகாப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற் கொள்ளுமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பாடசாலைக் கட்டிடங்களில் சம அளவுத் துணிகளினால் வெள்ளையும், கடும் நீலமும் சேர்த்துத் தைத்த கொடிகளை வானத்தில் இருந்து பார்க்கும் பொழுது தெளிவாகத் தெரியும் வண்ணம் பறக்கவைத்தல் - பாதுகாப்பை முன்னிட்டு இக் கொடியின் நிற அமைப்பு செஞ்சிலுவைச் சங்க மூலம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்படுகின்றது.

மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகள் மேல் இருந்து பார்க்கையில் தெரியாது

— 4 ஆம் பக்கம் பார்க்க

## குஜ்ராலின் கொழும்பு விஜயம் ரத்து

இம்மாத இறுதியில் கொழும்பு வரவிருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் குஜ்ரால் தனது விஜயத்தைக் கைவிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தவிர்க்க முடியாத காரணங்களினாலேயே குஜ்ராலின் விஜயம் தடைப்பட்டதாகக் கொழும்பில் வெளியுறவு அமைச்சு தெரிவித்தது.

இம்மாதம் இங்கு வரவிருந்த இந்தியப் பாராளுமன்றக் குழுவின் விஜயமும் இவ்வாறு தடைப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (து)

## மணலாறில் உக்கிர மோதல்

## 4 சிப்பாய்கள் பலி; ஆயுதம் மீட்பு

நேற்றுக் காலை மணலாறு (வெலிஓயா) மாவட்டத்தில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம் பெற்றுள்ளது.

நேற்றுக் காலை 9.15 மணியளவில் கொக்குளாய் முகத்துவாரம் இராணுவ முகாமில் இருந்து ஒரு மைல் தூரத்தில்உள்ளநீர்த்தொட்டி ஒன்றுக்கு இராணுவத்தினர் நீர் பெறச் சென்றபோதே தாக்குதல் நடாத்தப்பட்டது.

— 4 ஆம் பக்கம் பார்க்க

## ஊர்காவற்படை, ராணுவம் மீது புலிகள் கடும் தாக்கு

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டம் மீராவோடைப் பகுதியில் ஊர் காவற்படையினர் மீதும் ராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர்.

ஊர்காவற்படை மீது முதலில் புலிகள் தாக்குதல் நடத்திய போது இவர்களுக்கு உதவியாக ராணுவத்தினர் வந்தபோது இவர்கள் மீது புலிகள் தாக்குதலைத்தொடுத்தனர்.

பலமணிநேரம் இம்மோதல் நடைபெற்ற போதிலும் படையினரின் சேதவிபரங்கள் தெரியவில்லை. (து)

## வவுனியாவில் கடும் கெடுபிடி

## லொறிச் சாரதிக்கு ராணுவம் கம்பிக்குத்து

வவுனியா தடை முகாம் பகுதியில் ஐந்து இடங்களில் மேற்கொளளப்படும் சோதனைகளின் போது லொறிகளின் சகல பொருட்களையும் இறக்கி வெறும் லொறியாக குறிப்பிட்ட எல்லை வரை செல்ல வேண்டும் எனப்பணிக்கப்படுகிறது என அறியவந்துள்ளது.

சகல பொருட்களும் பிரிக்கப்பட்டே சோதனை மேற் கொள்ளப்படுகின்றன. இதற்காக லொறியொன்றிற்கு 400 ரூபா வீதம் அறவிடுகின்றனராம். இதைவிடப் பொருட்களை அபகரிப்பதி

— 4 ஆம் பக்கம் பார்க்க

### சமூக நீதியா? அதிகார சதுரங்கமா?

பின்தங்கிய வகுப்பினருக்கு நீதி வழங்க முனையும் வி. பி. சிங் அரசு இத்தனை எதிர்ப்பையும் சந்திக்க நேர்ந்தது ஏன்? ஆண்களும் பெண்களுமாக, இத்தனை பேர் தீக்குளிப்பதேன்?

'மண்டல் கொமிஷன்' என்கிறார்களே, அது எதைப் பற்றிய கொமிஷன்?

எதிர்ப்பியக்கம் தெற்கைவிட, வட இந்தியாவில், ஏன் உக்கிரமடைந்துள்ளது?

ஆழமாக, அகலமாக, நுணுக்கமாக அலசுகிறார் எமது அரசியல் விமர்சகர்

க. மா. இராசையா!

தவறாது படியுங்கள், நாளைய முரசொலியை!

நேற்று வெளியான ஏஜென்ஸித் தகவல்

# கிழக்கில் முப்பது தமிழர்களை பொலிஸார் சுட்டுக் கொன்றனர்

கிழக்கு மாகாணத்தில் முப்பது தமிழர்கள் ஸ்ரீலங்கா பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

கிழக்குப் பகுதியிலுள்ள முகாம் ஒன்றிலிருந்து சில கைதிகள் தப்பியதனையடுத்து ஸ்ரீ லங்காவின் சிறப்புப் பொலிஸ்படை மேற்கொண்ட நடவடிக்கையின்போது இத் தமிழர்கள் சுட்டுக் கொல்லப் பட்டதாக கொழும்பிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன என்று ஏஜென்ஸிச் செய்திகள் நேற்றுத் கூறின.

அம்பாறை மாவட்டத்தில் இச்சம்பவம் நிகழ்ந்ததென மற்றொரு தகவல் தெரிவிக்கின்றது. (ஸ்ரீ)

'நிதர்சனம்' வேண்டுகோள்

## புரட்சிப் பாதையில் தமிழீழக் கலைஞர் பங்கு

''எமது மக்களின் தாயகப் பற்றுடன் கூடிய போராட்ட உணர்வு ஒருமுகப்படுத்தப் பட்டு கூர்மைப்படுத்தப்பட் டாலன்றி நமது மண்ணின் விடுதலையானது துரிதமாக ஏற்படுதல் இயலாததாகும். மக்களைப் போருக்கும் புரட் சிக்கும் தயாராக்கும் மகத் தான பணியில் கலை இலக் கிய கர்த்தாக்களின் பங்கு மிகமுக்கியமானதொன்றா கும்'' என்று நிதர்சனம் வெளியிட்ட அறிக்கையொன் றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''கலை இலக்கிய ஊடகங் கள் மக்களை அணுகுவதற்கு இலகுவானதும் உணர்வு ரீதி யாகச் சிந்திக்கவைத்து செயற் பட வைக்கும் ஆற்றல் கொண் டுள்ளதென்பதை உலகின் பல் வேறு நாடுகளிலும் நடந்த, நடக்கின்ற விடுதலைப் போராட்ட நிகழ்விலிருந்து நாம் அறிந்துகொண்டுள் ளோம்.

சீனப்புரட்சியின் தலைவர் மாவோ, வியட்நாமியத் தந்தை ஹோசிமின் ரஷ்ய புரட்சிக் கலைஞன் மாக்ஸிம் கோர்க்கி, இருண்ட கண்டத் தில் விடுதலைவிடியலுக்காக இலக்கியம் படைத்த கறுப்புக் கலைஞர்கள், பாரத நாட்டின் விடுதலைக்காக கவிதைமூலம் அறைகூவல் விடுத்து மக்கள் எழுச்சிக்கு வித்திட்ட மகாகவி பாரதி, தாகூர், மற்றும் வங்க, கேரள மாநிலக் கலைஞர்கள், . .இப் படி ஏராளமானோர் தத்தம் தாயகத்து விடுதலைக்காக கலை இலக்கியப் படைப்பு கள் மூலம் மக்களின் உணர் வலையைத் தட்டி எழுப்பி போராட்டத்தில் பங்கேற்கச் செய்ததன்மூலம் போராட் டத்துக்கு தம் பங்கினை செவ் வனே செய்துள்ளதை வர லாறுகள் உறுதிப்படுத்துகின் றன,

''தமிழீழக் கலைஞர்களே! படைப்பாளிகளே!! உங்களை இந்தத்தேசத்தில் நம் தமிழீ ழத்தாயகத்தின் எதிர்காலம் தேசியக் கலைஞர்களாக, படைப்பாளிகளாக கௌர விக்கும் உயர்ந்த வாய்ப்பி னைப் பெறுவதற்கான இறு திக் கட்டத்தில் என்ன தீர்மா னம் எடுக்கப்போகிறீர்கள்?

உலகில் விடுதலைக்காகப் போரிடும் மக்களது வரலாறு கள் நிச்சயம் உங்களைச் சிந் திக்கவைத்து செயற்பட இயக்கும் மற்றவர்களைச் சிந்திக்கவும் செயற்படவும் வைக்கும் ஆற்றல் கொண்ட உங்களுக்கு நாம் புதிதாக எத னையும் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. விடிவை அண்மிக்கும் இவ்வேளை யில் அதனைத் துரிதப்படுத் தும் பணியில்— உங்களின் பங்கு கணிசமானது, என் பதை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம்.

இந்தவாய்ப்பினைப் பயன் படுத்தவிரும்பும் கலைஞர்கள் படைப்பாளிகள் அனைவரும் எம்முடன் தொடர்புகொள் ளவும்! எனவும் மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளன. (ஸ்ரீ)

## சுருவிலில் இன்று கொடுப்பனவு

இலங்கை வங்கி ஊர்காவற் றுறைக் கிளையினால்ஆகஸ்ட் மாத ஒய்வூதிய கொடுப்பனவு சாசோலை மூலம் சுருவில் புனித மரியாள் பாடசாலை யில் இன்று காலை 9 மணி முதல் வழங்கப்படும் என கிளை முகாமையாளர் பி. வ. அருமைநாயகம் தெரிவித்துள் ளார். இத்தருணத்தில் வங்கி ஊழியர்கள் அனைவரையும் கடமைக்கு வருமாறு அவர் கோரியுள்ளார். (16-ஸ்ரீ)

## கிளி- வவுனியா பஸ்சேவை ஆரம்பம்

கிளிநொச்சியில் இருந்து வவுனியா வரையிலான தனி யார் பஸ்சேவை கடந்த சில வாரங்களாக இடம்பெற்று வருகிறது.

கிளிநொச்சி பஸ் நிலையத் தில் இருந்து வவுனியாவுக்கு தினமும் மாலை 6 மணிக்கு தற்போது இரண்டு பஸ்கள் புறப்படுகின்றன.

அதேபோல் வவுனியாவில் இருந்தும் தினமும் கிளி நொச்சிக்கு பஸ்கள் வருகின் றன. இப்பயணத்துக்கான கட்டணமாக 250 ரூபா அற விடப்படுகின்றது. (35-கி)

## கௌரி நோன்பின் போது...

கல்வியங்காடு பத்திரகாளி வீரபத்திரர் கோயிலில் கௌரிநோன்பை முன்னிட்டு எதிர்வரும் வியாழக்கிழமை கௌரிக்காப்பு வழங்கப்பட வுள்ளது. (ஸ்ரீ)

## சித்த மருத்துவ, விஞ்ஞானபீடப் பரீட்சை முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

செல்வி என். விஜயநந் தினி, வி. சந்திரசேகர், எம். பி. சுரேஷ்குமார், எம். முரளீ தரன், 85 /SP/ 66 கே. ரமணி ஐயர், செல்வி எஸ். சிவமதி, வி.கே முருகையா, 87/SP/96 ரி. திருமலர், கே.சுபேந்திரன், 81/ SP/ 47 ஏ.சத்தியமூர்த்தி, 82/SP/92 எஸ்.செல்வராஜன், 83/ SP/ 12 எஸ் பி. கெங்கா தரன், ஏ. சந்திரமோகன், 84/ SP/ 35 ஏ. நித்தியா னந்தன், செல்வி எஸ். சின்த தேவி, 85/ SP/ 08 கே. தர்ம சீலன், பி. முரளிமனோகரன், கே. திருவாரன், என். சிறீ கரன், 87/ SP 13 செல்வி இ. ஏ. கே. வேதநாயகம், செல்வி எம். மாலினி, வி. எஸ். போல்ராஜ், வி. ரவீந்தி ரன், ரி. ரிச்சட் ஜெயகரத ரி. தேவநாதன், கே. உதய சந்தர், கே. பெரநந்தரூபன், 88/SP /21 செல்வி கே. கல் யாணி, 84/SP/50 எஸ்.செல்வ குமார். 86 / SP/53 கே. சிறி சங்கர், கே. யோகராஜா, 87/SP/44 வி. மணிவண்ணன்.

யாழ் பல்கலைக்கழக விஞ் ஞான பீட முதலாம் ஆண் டுப் பரீட்சையில் 'இரசாயன வியல்' பாடத்தில் மிகத் திற மையாகச்சித்தியடைந்தமைக் காக எம். வரதராஜா ஞாப கார்த்த பரிசில் செல்வி. எஸ். சுபோதினி என்ற மாண விக்கு வழங்கப்படுகிறது.

## வேகாத, தரமற்ற பாண் விற்றால் நடவடிக்கை

''யாழ் மாவட்டத்தில் பல் வேறு இடங்களில் தற்போ தைய நெருக்கடி நிலைமை யைப் பயன்படுத்தி தரமற்ற- வேக வைக்காத பாண் விற் பனை செய்யப்பட்டு வருகின் றது .விலை சற்று கூடினாலும் நல்ல தரமான பாணை உற் பத்தி செய்து பொது மக்க ளுக்கு வழங்க வேண்டியது பேக்கரி உரிமையாளர்களின் பொறுப்பாகும்.''

இவ்வாறு யாழ் மாவட்ட உணவு மருந்து பரிசோதகர் திரு. ரி. மகாதேவன் தெரி வித்துள்ளார்.

'வேகாத பாணை விற்பவர் கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். என்றும் திரு. மகாதேவன் எச்சரிக்கை விடுத்துள்ளார். பொது இடங் களில் பாணை வைத்து விற் கும்போது சுகாதார முறைப் படி ஈக்கள் மொய்யாத படி வைத்து விற்குமாறும் அவர் கேட்டுள்ளார். (13 ஸ்ரீ)

## சிறு விளம்பரம்

### சேவை

நல்லூரில் தரமான, தெளிவான போட்டோஸ் ரட்பிரதிகளை அதிவிரை வாகப் பெறவும் (காலை 9.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை), பாஸ்போட், அடையாள அட்டை, புகைப்படங்கள் (கறுப்பு- வெள்ளைப்படங்கள் மட்டும்)பிடிக்கவும், படங் களை 12'' × 10'' அள வுக்கு பெரிதாக்கவும் (மாலை 2.00 மணி தொடக்கம் 5. 00 மணி வரை) நாடவேண்டிய ஸ்தாபனம் சித்ராலயா, இல 351, கோவில் வீதி, (நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குஅண்மையில்) நல்லூர். 10063

### சேவை

தெளிவான போட்டோ ஸ்ரற் பிரதிகளையும் அடையாள அட்டைகளை யும் கவரிட்டு உடனடி யாகப் பெற்றுக் கொள்ள கிளீன் கட் 37, சிவகுரு நாதன் வீதி, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (இந்துமகளிர் கல்லூரிச் சந்திக்கு அருகாமையில்) வேலைநேரம்: காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை. 10081

## முரசொலிக்கு வந்த கடிதம்

### அண்ணாமாரே தங்கையர் சேலையில் கலாசாரத்தைக் காண்கிறீரோ?

ஆசிரியர்,
முரசொலி.

தங்களது பத்திரிகையில் 10-ம் திகதி வெளியான செய் தியில், நவம்பர் மாதம் 5-ம் திகதி யாழ் பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

புதிய மாணவர்களும் (கல்வியாண்டு 89/90) அன்றே விரிவுரைகளுக்கு சமுகமளிக்கவுள்ளனர். ஏற்கனவே அவர்கள் ஆங்கில வகுப்புக்களுக்கும் வெளிக்களப் பயிற்சிக்கும் சென்று வந்தனர். இவை கடந்த பெப்ரவரி மாதம் முதலே நடை பெற்று வந்தன. அவ்வாறு அவர்கள் ஆங்கில வகுப்புக்களுக் கும் வெளிக்களப் பயிற்சிக்கும் சென்று வரும் வேளையிலும் ''ராக்கிங்'' செய்யப்பட்டனர். தங்கள் பெயர்களை கடந்த பெப்ரவரி மாதம் பல்கலைக்கழகத்திலே பதிவு செய்ய வந்த போதுகூட சில மூத்த மாணவர்களால் நையப்புடைக்கப்பட் டனர். அத்துடன் கலைப்பீட மாணவிகள் (கலை, வர்த்த கம், வர்த்தக முகாமைத்துவம்) விரிவுரைகளிற்குச் சமுகமளிக் கும் போது கட்டாயமாகச் சேலை அணிய வேண்டுமெனவும் மூத்த மாணவர்களால் பணிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள சகலருக்கும் தமிழ்ப்பிரதேச மாணவர்கள் படும் இன்னல்களைப்பற்றிப் புரியும். இந்தியப் படையினரின் கண்மூடித்தனமான அட்டகாசங்களைப் பொருட்படுத்தாது இப்புதிய மாணவர்கள் 1988-ம் ஆண்டு க. பொ. த. உயர்தரப்பரீட்சையில் வெற்றிகரமாகத் தேறிய தன் மூலமாக பல்கலைக்கழகம் வரவுள்ளனர். எத்தனையோ பேர் வீடு வாசல்கள், உடைமைகளை இழந்துள்ளனர். அதிலும் கடந்த யூன் மாதத்திற்குப்பின் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் கஷ்டப்பட்டுள் ளனர்.

இந்நிலையில் கலைப்பீட மாணவிகள் சேலை கட்டாய மாக அணிய வேண்டும் என்பது இயலாத காரியம். கலைப் பீட மாணவிகள் கலாசாரத்திற்காகச் சேலை அணிய வேண்டு மெனில் மற்றைய பீட மாணவிகளுக்குக் கலாசாரம் இல் லையா? அல்லது அவர்களுக்கு கலாசாரம் பற்றித் தெரி யாதா? வரவேற்புபசாரம் நடைபெறும்வரை சேலை அணிய வேண்டுமாயின் வரவேற்புபசாரத்திற்குப் பின் கலாசாரத் தினைக் கைவிட்டு விடுவதா? எத்தனையோ பேருக்கு சரி யாக மூன்று வேளையுமே சாப்பிடமுடியாத வேளையில் சேலை வாங்கத்தான் முடியுமா?

எமது நிலையைப் புரிந்துகொண்டும் அவர்கள் 'ராக்கிங்' செய்ய முற்பட்டால் அதனை 'அடாவடித்தனம்' என்றே கூறவேண்டும்.

எனவே முரசொலி மூலமான எமது வேண்டுகோளை ஏற்று பழைய மாணவர்கள் எம்மை இன்முகத்துடன் வர வேற்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்,

யாழ் இந்து மகளிர் கல்லூரி
'ஜெல்ட்' மாணவிகள்
(கி)

## பணமுடையால் தீபாவளி ஜவுளி விற்பனை மந்தம்

வலிகாமம் மேற்குப் பகுதி யிலுள்ள புடவைக் கடை களில் தீபாவளிப் பண்டிகைக் காகப் பெருந்தொகையான சேலைகள் துணி வகைகள், இந்தியச் சாரங்கள் ஆகியன விற்பனைக்காக அடுக்கி வைக் கப்பட்டுள்ளன.

பண்டத்தரிப்பு, சங்கானை ஆகிய பகுதிகளிலுள்ள கடை களில் தீபாவளிக்காக ஏராள மான துணி வகைகளும், ''ரெடிமேட்'' உடுப்புகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந் தும் தற்போதைய பொரு ளாதார நெருக்கடி நிலைமை யினாலும், பணப்புழக்கம் மிகவும் குறைந்துள்ளமை யாலும் இவற்றை வாங்கு வோர் தொகை மிகவும் குறை வாகவே இருப்பதை அவ தானிக்க முடிகிறது. (13 ஸ்ரீ

## இவருக்கு ஒரு சபாஷ்

மக்கள் மிகுந்த நெருக்கடிக ளால் பலவிதங்களில் அல்ல லுறும் இவ்வேளை, சில அர சாங்க ஊழியர்கள் தம் சிர மத்தையும் பாராது பரந்த மனப்பான்மையுடன் செயற் பட்டு வருகின்றனர்.

இந்தவகையில் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரி விலுள்ளகல்வியங்காடு கிராம சேவகர் திரு. ஜே. எஸ். செல்லத்துரை ஆற்றி வரும் அரும்பணி பலரினது பாராட் டையும் பெற்றுள்ளது.(33ஸ்ரீ )

## அறிவித்தல்

### திருகோணமலை பத்திரகாளி அம்மன் ஆலய கேதாரகௌரி விரதகாப்பு விநியோகம்

திருகோணமலை பத்திரகாளி அம்மன் கோவில் கேதாரகௌரி விரதகாப்பு இம்முறை மக்களின் வசதி கருதி திருகோணமலையில் இருந்து கொண்டு வரப்பட்டு கல்வியங்காடு இலங்கைநாயகி அம்மன் கோவிலில் 18-10-90 வியாழக்கிழமை காலை 8 மணி பூசையைத் தொடர்ந்து காப்பு வழங்கப்படும், கிளி நொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட் டங்களைச் சேர்ந்த அடியார்கள் அன்றைய தினமே பதிவு செய்து திருக்காப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

பொ. கிருஷ்ணமூர்த்தி சர்மா
இலங்கைநாயகி அம்மன் கோவில்,
கல்வியங்காடு, - நல்லூர்.

தகவல்:
சோ ரவிச்சந்திரக் குருக்கள்,
ஆதீனகர்த்தா,
பத்திரகாளி அம்மன் கோவில். 10080

முரசொலி

எமது சிந்தனை

1990 - 10 - 15 திங்கள்

''எந்தக் கஷ்ட காலத்திலும் கைவிடாத, எந்தக் குற்றச் செயலாலும் அழிக்கமுடியாத, எந்தப் பகைவனாலும் பிரிக்க முடியாத, எந்தக் கொடுங்கோலனாலும் அடிமைப்படுத்த முடியாத நண்பன் கல்வி.

அக வீட்டில் நண்பன், அயல்நாட்டில் அறிமுகம், ஏகாந்தத்தில் நிம்மதி, சமூகத்தில் அணிகலன்.

- சார்ல்ஸ் வால்

# இழக்கமுடியாதது

யாழ்ப்பாணம் கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த 50 கொத்தணி அதிபர்களும், கொத்தணிக்கு இருவராக 100 பெற்றோரும், 6 உதவிப் பணிப்பாளர்களும் கல்விப் பணிப்பாளர் அழைப்பின் பேரில் கடந்த வாரம் கூடி, ஏகமனதாக ஒரு முடிவெடுத்துள்ளார்கள்:

''பாடசாலைகளை மீளத் திறக்க வேண்டும்!''

இந்த முடிவை மனதார வரவேற்கிறோம்.

பாடசாலைகள் மூடப்பட்ட சூழ்நிலைகள் புரிந்து கொள்ளக்கூடியவை. ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. பரவலாகக் குண்டுவீச்சு நடைபெற்றது மக்கள் இடம் பெயரத் தொடங்கியிருந்தார்கள்.

வான் தாக்குதல் ஏற்படுத்திய அழிவு, இழப்பு, அதிர்ச்சி, பீதி இவற்றால் நம் வாழ்வே ஸ்தம்பிதமடைந்தது. உணவுப்பஞ்சம், விலையேற்றம், மின்வெட்டு, எரிபொருள் தடை, வேலையின்மை- எல்லாம் நம்மை வாட்டி எடுத்தன.

ஆனால் மக்கள் இடிந்து போய் உட்கார்ந்து விடவில்லை! அதிர்ச்சியிலிருந்து மெல்ல, மெல்ல மீளத் தொடங்கினார்கள்.

கடைகள் திறந்தன; சந்தைகள் கூடின; மருத்துவமனை சுறுசுறுப்படைந்தது; கூட்டுறவுச் சங்கங்கள் முழு மூச்சுடன் செயற்பட்டன; பத்திரிகைகள் வெளிவந்தன; பாண் கூட வீதிக்கு வந்து விட்டது!

ஆனால் பாடசாலைகளை மீளத்திறந்து மாணவர்களுடைய கல்வியைத் தொடர்வதில் ஒரு தயக்கம்! 'பிள்ளைகளுடைய பாதுகாப்புக்கு யார் பொறுப்பு?' என ஓர் ஆயாசம்; அச்சம்!

இந்தத் தேக்க நிலையிலிருந்து நாம் விடுபட வேண்டும். எது தேங்குகிறதோ, அது வளராது!

நிச்சயமற்ற இந்தச் சூழ்நிலையிலும், தமிழர் தமது இலக்குகளைத் தெளிவாக வைத்திருக்க வேண்டும். கல்வியே நமது தளம்!; கல்வியே நமது பலம்! சிறுபான்மையினரான நாம் கல்வி மூலம் அடைந்த முன்னேற்றம் கண்டு ஏற்பட்ட அழுக்காறே இனப்பிரச்சினையின் மூலவேர்.

இந்தக் காலகட்டத்துச் சவால்களுக்கு முகம் கொடுக்காது, நாம் கல்வியில் பின் தங்குவோமானால், எமது எதிரியின் எண்ணம் ஈடேற ஒத்துழைத்தவர்களாவோம்! இந்தத் தலைமுறை கல்வியில் வஞ்சிக்கப்பட, சும்மா பார்த்திருந்தோம் என்ற பழி நம்மைச்சூழும்!

போர்க்காலச் சூழலுக்கேற்ப நம்மை நாமே மாற்றிக் கொள்ள வேண்டும்.

''மாறும் சூழலுக்கேற்றவாறு தன்னை இசைவாக்கிக் கொள்பவனே பிழைத்து வாழமுடியும்!''

என்ற சார்ல்ஸ் டார்வின் கூற்று ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

இந்த இசைவாக்கம் நடைபெறாமலில்லை. திருமணம், இழவு, மகப்பேறு, திருவிழா, கலாசார நிகழ்ச்சி என்று எதிலும் நாம் குறை வைக்கவில்லை! பொம்மர் சுற்றுகிறதே, ஹெலி சுடுகிறதே என்று சந்தைக்குப் போகாமலோ, சங்கக் கடையில் கூடி நிற்காமலோ, கோப்பாய், செம்மணி, கைதடி, வல்லை வெளிகளைத் தாண்டாமலோ விடுவதில்லையே!

இனவிடுதலைப் போர் இப்பொழுது முடியப் போவதில்லை. எனவே, போர்க்கால அடிப்படையில் நமது கல்விப் பணியைச் செய்ய வேண்டியது அவசியம்.

மாணவர்களுடைய பாதுகாப்பை இயன்ற அளவு உறுதி செய்து கொள்ளவேண்டும். பதுங்குகுழி அமைப்பதில் மாணவரும், ஆசிரியரும், பெற்றோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

எப்படி ஒழுங்காகப் பதுங்குகுழிக்குப் போவது என்பதற்கு ஒத்திகை வைக்க வேண்டும்.

உடற்பயிற்சி, தற்பாதுகாப்புப் பயிற்சி, உணவுற்பத்தி முதலியவற்றுக்கு அன்றாடக் கற்பித்தலில் முக்கிய இடந்தர வேண்டும்.

ஏராளமான மாணவர்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள் அவர்கள் தற்போது தங்கியிருக்கும் இடங்களுக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளில் கற்பதற்கான அறிவுறுத்தல்களைக் கல்விப்பணிப்பாளர் அனுப்பியுள்ளார்.

ஒரு நேரப் பாடசாலை நடத்துவதே இப்போதைக்கு யதார்த்தமானது.

இடம் பெயர்ந்தவர்கள் பெருவாரியாகக் கற்கும் பாடசாலைகளில் இருநேர வகுப்புக்கள் நடத்தலாம்.

பாட நேரத்தைக் குறைத்தும். பிள்ளைகள் குறைவான பிரிவுகளை ஒன்றாக்கியும் வகுப்பு நடத்தலாம்.

அகதிகள் தங்கியிருக்கும் பாடசாலைகளைப் பொறுத்தவரை மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

இவையெல்லாம் மேலதிக பொறுப்புக்கள். கல்விப் பணிப்பாளர் தம்மாலான அனைத்தையும் செய்ய முன் வந்துள்ளார். ஆசிரிய உலகம் அர்ப்பணிப்புணர்வோடு இப்பொறுப்புக்களை ஏற்கும் என்பதே எமது நம்பிக்கை.

## நிவாரண நடவடிக்கை

தற்போதைய வன்செயல்கள் காரணமாகப் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த அரச, கூட்டுத்தாபன, சபைகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்குவது சம்பந்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்டவர்கள் தத்தமது கிராமசேவை அலுவலர்களிடம் விபரங்களைக் கொடுக்குமாறு யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் அறிவித்துள்ளார்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மேற்படி விபரங்கள் இன்று முதல் சேகரிக்கப்படவிருப்பதால் சம்பந்தப்பட்டவர்கள் தமது விபரங்களை அந்தந்தக் கிராம சேவை அலுவலர்களிடம் சமர்ப்பிக்குமாறு நல்லூர் உதவி அரச அதிபர் அறிவித்துள்ளார். (66ஸ்ரீ)

## முறைசாரா மாணவருக்கு...

முறைசாராக் கல்விப்பிரிவில் தொழிற்திறன் பயிற்சி பெறும் மாணவர்கள் தத்தமது பாடசாலைகளில் இன்று திங்கள் சமுகந் தந்து தமது போதனாசிரியர்களுடன் வகுப்புக்களை ஆரம்பிப்பது பற்றி கலந்தாலோசிக்குமாறு முறைசாராக்கல்வி அதிகாரி ச. சுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

யாழ். மத்திய கல்லூரி, வேம்படி, இந்துமகளிர்கல்லூரி, கொட்டடி நமசிவாய வித்தியாலய மாணவர்கள் யாழ் கல்வித்திணைக்களத்தில் தமது போதனாசிரியர்களைச் சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (70-கி)

## கோப்பாயில் திருட்டு முறியடிப்பு

கோப்பாய் மத்தி நாவலடி டிரான்ஸ் போமரில் ஒயில் திருட முயன்றவர்கள் இரவு வேளையில் அப்பகுதி மக்களால் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.

அரசினர் வைத்தியசாலைக்குப் பகல் நேர மின்சாரம் வழங்கும் முகமாக இரண்டொரு தினங்களுக்கு முன் நிரப்பப்பட்ட எண்ணெய்யே திருடப்பட்டது. திருடியவர்கள் உரும்பராய், வசாவிளான் பகுதியைச் சேர்ந்தவர்களென்றும் இந்த எண்ணெய் டீசலுடன் கலப்பதற்குகந்தது என தெரிவிக்கப்பட்டதாகவும் விசாரணையின்போது தெரியவந்தது. (23ஸ்ரீ)

## செம்மறியால் வந்தவினை

தமது செம்மறி ஆடுகளை அவிழ்த்து விட்டு அயற் காணிக்காரரின் நெற்பயிர்களை அழிக்கக் காரணமாக இருந்த ஆடுகளின் உரிமையாளருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் அபராதம் விதித்தனர் மாரீசன்கூடல் என்னுமிடத்திலுள்ள வயற் காணியில் நடைபெற்ற இப்பயிரழிவு பற்றி பண்டத்தரிப்பிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரதேச அலுவலகத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து இந்த அபராதம் விதிக்கப்பட்டது. ஆடு, மாடுகளை கட்டாக்காலியாக அவிழ்த்து விட வேண்டாம் என்று அண்மையில் விடுதலைப்புலிகள் எச்சரிக்கை விடுத்ததும் குறிப்பிடத்தக்கது. (13 ஸ்ரீ)

# கவிதா விவாதம்

### இரண்டாவது சுற்று

கறுப்புச் சந்தை விவாதம் தொடர்கிறது. ஏராளமான அன்பர்கள் கவிதைகள் அனுப்பி எம்மைத் திணறடித்து விட்டார்கள். இன்று நான்கு கவிதைகள் வெளியாகின்றன.

பலருடைய ஆக்கங்கள் கவிதை என்ற வார்ப்புக்குள் வர மறுக்கின்றன.

விஷயத்தை நறுக்குத் தெறித்தாற் போற் சொல்ல வேண்டும். படிப்பவன் - கேட்பவன் மனதில் ஒரு சிலிர்ப்பை ஏற்படுத்த வேண்டும்.

கவிதை இறுக்கமான - செப்பமான -வடிவம்.

நல்ல கவிதைகளைப் படிப்பதாலும், நிறைய எழுதி எழுதிப் பயிலுவதாலும் ஆக்கத் திறனை வளர்த்துக் கொள்ளுமாறு இளங்கவிஞர்களை வேண்டுகிறோம்.

- ஆசிரியர்

### உண்டி கொடுக்கிறோம்!

நரிகளும் பேய்களும் நடமாடும் காட்டுக்கு
நாம் சென்று வருகின்றோம் நித்தம் !
நயமாக வாபொருள் தருகின்றார் எமக்கு? - இதை
நன்குசிந் தித்தபின் கத்தும் !

'உண்டி கொடுத்தவர் உயிர் கொடுத்தோரென'
உரைத்தவன் உம்மினத் தவனே
மிண்டுதல் யாருக்கும் எளிது; எதிர்க்காற்றிலே
மிதியுங்கள் சைக்கிளை - புரியும் !

மக்கள் பசியினைப் போக்கிடும் எங்களை
வசை பாடல் தான்பெரும் அறமோ?
செக்கினை நம்பி முடங்கி ஓர் மூலையில்
திகைத்துப் போய் இருப்பது தவமோ?

- C. V. குணசேகரம்

### சேவை மறந்து பேசுவதோ!

கறுப்புச் சந்தைக் காரர்களே கொஞ்சம்
பொறுத்து நின்று கேளுங்களேன்- உம்மை
வெறுத்துப் பேசும் மக்களிடம் - ஒன்று
மறுத்துச் சொல்ல வேண்டாமோ!

பதுங்கு குழிக்குள் நாமெல்லாம் - தினம்
ஒதுங்கிக் கொள்ள நீரங்கே
வதங்கிச் செத்தீர் வெளிகளிலே - அந்த
விதங்கள் எத்தனை சொல்லய்யா

கையில் உயிரைப் பிடித்தே - நீர்
வெய்யில் மழையைப் பாராது - தினம்
செய்யும் தொழிலைப் பலரிங்கே
கறுப்பாய் காண்பது ஏனையா.

தேவை முடிந்து போனதுமே
நாவை வளைத்துப் பேசுவதோ
சாவை மறந்து நீர் செய்த
சேவை மறந்து பேசுவதோ

— புலோலி சரஸ்வதி

### அறுப்பதோ முறை?

நூற்று எழுபதில் நிலநெய் விற்றவர்,
நேற்று இருபதில் நுடங்கிக் கொள்ள,
காற்று எதிர்ப்பும்; காலுழக்குச் சைக்கிளின்
கடுமிதிப்பும் எப்படிக் கூடிக் குறைந்ததையா?

காட்டுப் பாதையாற் கள்ளக் கடத்தலைக்
கொள்ளையர் கூட்டங் கூட்டிக் கொடுக்க;
'நாட்டு நரிகள்' நைலா' கச் சுழியோடி,
நம்மடி வயிற்றில் அடிப்பதோ தொழி
லையா?

'காற்றுள்ள போதே கசக்கித் தூற்றுறோம்'
'கொள்ளை இலாபத்திற் கொடிகட்டு
றோமென்று',
ஆற்றுவா ரில்லா ஏழை மக்களை
அநியாய விலையில், அறுப்பதோ
முறையா ஐயா?

வெளிநாட்டுக் காசில் 'வெள்ளோட்டம் போகும்'
'வெள்ளைத் துரைமார்' வேண்டி விசுக்கலாம்!
வெளிநா டில்லா வெறும்பாட் டாளிகள்
விலைவாசி யேற்றத்தில், வாழமுடியு
மோவையா?

- 'அநுமித்ரன்'

### விற்றுப் பிழைக்கிறோம்

பத்து ரூபாய் லாபம் வேண்டின்
எத்தனை தூரம் அலைகிறோம்
சொத்துப் பத்து எமக்கு இல்லை
வித்துத் தானே பிழைக்கிறோம்!

உயிரைப் பணயம் வைத்து நாங்கள்
உழைக்க எண்ணிச் செல்கிறோம்
வயிறைக் கழுவ எமக்கு வேறு
வழிகள் ஏதும் இல்லையே!

கொள்ளிக் கட்டை கூட நாங்கள்
கொத்திச் சுமந்து விற்கிறோம்
கள்ளச் சந்தை என்று தாக்கிக்
கவிதை பாடல் அடுக்குமோ!

(கவிஞர் தம் பெயரைத் தரவில்லை)

## படம் ஏற்படுத்திய படபடப்பு

# தலைவர் பிரபா என்றாலே இராணுவம் தொடைநடுக்கம்

ஸ்ரீலங்கா இராணுவத்திற்குச் சிம்ம சொப்பனமாக விளங்குகிறார் தமிழீழவிடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வி. பிரபாகரன் என்பதனை உறுதிப்படுத்தி, அவரைப் போன்ற உருவமைப்புக் கொண்ட நிழற்படத்தைக் கண்டால்கூட அவர்கள எவ்வளவுதூரம் கலங்கிப் போகிறார்கள் என்பதனைத் தெளிவுபடுத்தும் சம்பவம் ஒன்று சமீபத்தில் வவுனியா மாவட்ட வைரவப் புளியங்குளத்தில் நிகழ்ந்துள்ளது. நடந்தது இதுதான்: குறிப்பிட்ட பகுதியிற் பல வீடுகள் இருந்தும்கூட இராணுவத்தினர் தமது தேடுதல் நடவடிக்கையின்போது குறிப்பிட்ட ஒரு வீட்டை மாத்திரம் தீக்கிரையாக்கியுள்ளனர். ஏனைய வீடுகளை உடைத்துவிட்டு மாத்திரம் சென்றனர். இதுபற்றி அறிந்துகொள்ள முற்பட்டபோது, அவ் வீட்டுக்கதவை உடைத்து உட்புகுந்ததும் வீட்டுக்காரர் கம்பீரமான தோற்றத்துடன் தன் மனைவி சகிதம் எடுத்துக்கொண்ட பெரிய அளவிலான புகைப்படம்தான் முதலில் தென்பட்டதாம். பிரபாகரன், பிரபாகரன் என ஓலமிட்டபடி உள்ளே பிரவேசிக்காமல் வீட்டைக் கொளுத்திவிட்டனராம் பிரபாகரன் தம்பதியின் படமென அவர்கள் அதனைக் கருதினராம். அவர்களுடன் சென்ற தமிழ் தெரிந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் மூலம் பின் இதுபற்றிய மேற்படி விவரங்கள் தெரிய வந்தனவாம். (ஸ்ரீ)

# தமிழ் வாலிபர் கைது; செல்லச்சாமி கண்டனம்

கொழும்பில் விடுதிகளிலும் கோட்டல்களிலும் தமிழ் இளைஞர்கள் கண்டபடி பிடிக்கப்படுவதனையும்நியாயமின்றித் தடுத்து வைக்கப்பட்டிருப்பதனையும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், ராஜாங்க அமைச்சருமான திரு. எம். எஸ். செல்லச்சாமி ஆட்சேபித்துள்ளார்.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்னவுடன் தொடர்பு கொண்டு அவர் இந்த ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார்.

''இளைஞர்களை அவமானப்படுத்துவதனால் அவர்கள் ஆத்திரப்படவே செய்வார்கள்'' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ)

### பாடசாலையில்...

இருக்கும்படி பாதுகாப்பான இடங்களில் நிறுத்திவைத்தல்.

பாடசாலை விடும்பொழுது மாணவர்களை வகுப்பு ரீதியாக ஐந்து நிமிட இடைவெளியில் மாணவர் தலைவர்கள், சாரணியர்கள், ஆசிரியர்கள் உதவியுடன் பாதுகாப்பாக வெளியே செல்ல அனுமதித்தல்.

பெற்றோர்/ பாதுகாவலர்களைக்கூடியஅளவுக்குப்பாடசாலையில் தங்க வைத்து அவசியம் ஏற்படும் கால் மாணவர் பாதுகாப்பில் அவர்களையும் ஈடுபடுத்தல்.

பாடசாலை நேரத்தில் மாணவர்களை எக் காரணம் கொண்டும் பாடசாலை வளவுக்கு வெளியே அனுமதிக்காமல் இருத்தல்.

பாடசாலைகளில் முதலுதவிப் பெட்டிகள் அவசரச் சிகிச்சைக்கு ஏற்ற மருந்து வகைகளைப் பேணி வைத்தல் போன்ற முன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளது. (து)

### அரியாலையில்...

கணபதிப்பிள்ளை துரைராஜா என்பவரது வீடு பலத்த சேதமுற்றது. (47-33-66-17-ஸ்ரீ)

### திருநெல்வேலியில்...

பின் அவர் உயிர் பிரிந்தது.

குணரத்தினம் நாகரத்தினம் (பெண் வயது 55) என்பவர் படுகாயமடைந்து இதே வைத்தியசாலைக்கு விரையப்பட்டார். அவர் உயிர் ஊசலாடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

துரைராஜா ரவீந்திரன், நித்தியானந்தன் லக்தினோஸ்வரி, நித்தியானந்தன் லங்கநாயகி, ரத்தினேஸ்வரி செல்லப்பா ஐயாத்துரை, செல்லையா லலிதா, பாக்கியம், ஜெயராஜ் ஆகியோரும் படுகாயமுற்பனர்.

இக் குண்டுவீச்சினால் ஏற்கனவேசேதமுற்றுப் பல்லாயிரம் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டுள்ள சந்தைக் கட்டிடங்கள் தரைமட்டமாகின. ஆண்மித்துள்ள டாக்டர் செல்வி செல்லப்பாவின் வீடும் பலத்த சேதமுற்றது, இது இரண்டாவது தடவை இவரது வீட்டுக்கு நிகழ்ந்துள்ள சேதமாகும். குண்டுவீச்சு நிகழ்ந்தவேளை இவர்கள் பதுங்கியிருந்த பதுங்குகுழி வாயில் அதிர்வினால் மூடப்பட்டு விட்டதாகவும் அயலவர் விரைந்து வந்து தக்கதருணத்தில் காப்பாற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (66ஸ்ரீ)


## தீபாவளி மலிவு விற்பனை

சகல விதமான சாறிவகைகள்,
பிளவுஸ் துணிகள்,
கவுண்கள் அனைத்தும்

மலிவு விற்பனையில் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்

### த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

பருத்தித்துறை வீதி,
(பாரதியார் சிலைக்கு அருகாமையில்)
நல்லூர். 10086


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, லக்ஷ்மிபில்டிங் இல் உள்ள அச்சகத்தில் 15-10-90 அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

★ கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான அரச வாகனங்கள் நிர்மூலம் ★ ராணி மாளிகையும் சிதைவு ★ காலியான நகைப் பெட்டிகள்

# யாழ் கோட்டையின் உள்ளே...

பல்லாண்டுகளுக்கு முன் கடல்கடந்து வந்த அந்நியரால் தமிழர்தம் தாயக பூமிதனில் அமைக்கப்பட்ட கோட்டை, அவர்களுக்குப் பின் காருண்யத்தின் வடிவம் என பாரெங்கும் போற்றப்படுகின்ற, பகவான் புத்தரின் பெயர் சொல்லும் பதர்களால் கைப்பற்றப்பட்டு சொந்த நாட்டிலேயே மக்களை சித்திரவதை செய்யும் பலிபீடமாகப் பாவிக்கப்பட்டு வந்த அக்கல்மேடு, இன உணர்ச்சி மேவி நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளால் மாற்றானை விரட்டியடித்துக் கைப்பற்றப்பட்டு புலிக்கொடி பட்டொளி வீசிப் பறக்கும் நிலை இன்று.

அக்கோட்டை விடுதலைப் புலிகளால் முற்றாகக்கைப்பற்றப்பட்டதன் பின் நேற்று யாழ் பத்திரிகையாளர்கள் நேரில் உட்புகுந்து பார்க்கும் வாய்ப்பு அவர்களால் நேற்று அளிக்கப்பட்டது.

### புலிக்கொடிபறக்கும் வாயிலூடே

காம்பீர்ய உருவம்கொண்ட, விடுதலை வேட்கை கொண்ட புலிப் போராளிகள் சகிதம் உள்ளே புகுகின்றனர் பத்திரிகையாளர்.

உள்ளே கோட்டைக்குச் செல்லும் முன் வாயில் விடுதலைப்புலிகளினால் அகற்றப்பட்டிருந்தது.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சிலரின் உடல்கள் தீயில் பொசுங்கிய காட்சி தெரிகிறது.

வங்கிகளின் பாதுகாப்புப் பெட்டிகள் உடைக்கப்பட்டு வாய் பிளந்து காணப்பட்டன

### சின்னாபின்னம்

இராணுவத்தால் அமைக்கப்பட்டிருந்த காவல் அரண்கள் பல புலிகளின் வீராவேசத் தாக்குதலால் சிதைந்து சின்னாபின்னமாயிருந்தன.

புலிகளின் கடும் சாதுர்யத் தாக்குதல்களால் கோட்டையின் முகப்பும் பாதிப்புற்றிருந்தது.

பொதுமக்கள் பலரும் கோட்டைத்தகர்ப்பில் ஈடுபட்டிருந்தனர்,

சுமார் ஐம்பது வாகனங்கள் (அரசுக்குச் சொந்தமானவை) தீமூட்டி எரிக்கப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகளினால் அடிக்கடி கோட்டை நோக்கி ஏவப்பட்ட பசிலின் 2000 ஷெல்லின் தாக்கத்தை கோட்டையின் பல பகுதிகளிலும் காணக் கூடியதாக இருந்தது மதில்கள் ஆட்டம் கண்ட நிலையிலிருந்தன.

### ராணிமாளிகை

கோட்டைக்குள் அமைந்துள்ள ராணிமாளிகையும் சேதமடைந்திருந்தது.

### அகழிகளில் மிதக்கும் பொதிகள்

விமானங்களினால் போடப்பட்ட உணவுப் பொதிகள் வாயிற்புறம் அண்டிய அகழிக்குள் மிதக்கக் காணப்பட்டன.

### ஹெல்மட்

இங்குள்ள கிணறுகளிலிருந்து நீர் பெறப் படையினர் தத்தம் ஹெல்மட்டைப் பாவித்திருந்ததையும் அறிந்து கொள்ளமுடிந்தது.

பல மோட்டார் சைக்கிள்கள், ரி.வி, தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன நிர்மூலமாக்கப்பட்டிருந்தன.

புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட பொம்மரின் சிதைவுகளை மீட்பதிலும் பெரும் சண்டை நடைபெற்றிருப்பதை அவதானிக்கமுடிகிறது. கோட்டைக்கு அண்மையிலுள்ள கடலினுள் அவ் விமானம் விழுந்துள்ளது. விமானத்தின் சிதைவுகள் மீட்கப்பட்டதில் பாவிக்கப்பட்டிருந்த கயிறு இப்பொழுதும் அவ்விடத்தில் காணப்படுகின்றது. (70 ஸ்ரீ)

### போராளி நினைவாக

வீரமரணமடைந்த ஜான் என்ற போராளி நினைவாக இன்று திங்கட்கிழமை கைதடியில் பாலர் பாடசாலை ஒன்று திறந்து வைக்கப்படுகிறது. (து)

### வடமராட்சியிலும்...

மரித்தன. பகல் 11. 45 மணியளவில் இக் கொடூரங்கள் நிகழ்த்தப்பட்டன.

### அகதிகள் பகுதியிலும்

அகதிகளாகத் தங்கியிருந்தோர் பகுதியில் குண்டுவீச்சு நிகழ்ந்ததால் தனபாலசிங்கம் துரைராஸ் (வயது 8) ஊர்காவற்துறை, ஐயாத்துரை குமாரதாஸ் (வயது 13) உடுப்பிட்டி, விநாயகமூர்த்தி மோகன் (வயது 14) வீரபத்திரர் கோவிலடி உடுப்பிட்டி ஆகிய மூவருமே உயிரிழந்தனர்.

### காயமுற்றோர்

இச்சம்பவத்தில் எஸ். சிவனேசசுந்தரம் (வயது 39) வல்வெட்டித்துறை, கே. ஞானப்பிரகாசம் (வயது 67) உடுப்பிட்டி, எஸ். முத்துலிங்கம் (வயது 38) குரும்பசிட்டி, அன்ரன் ஞானச்செல்வம் (வயது37) பலாலி, ஏ நகுலேஸ்வரன் (வயது 15) மண்டான் காணவாய்எஸ்குஞ்சுப்பிள்ளை (வயது 65) உடுப்பிட்டி ஆகியோர் படுகாயத்துடன் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

பருத்தித்துறை 1-ம் கட்டை சந்திக்கு அண்மையிலும் குண்டுகள் வீழ்ந்ததால் வி. எஸ். அழகேசன், திருமதி இ. கந்தசாமி, திருமதி எஸ். இராசம் என்பவர்களது வீடுகள் பெரும் சேதத்திற்குள்ளாகின. அங்கிருந்த கால்நடைகளும் மரணித்தன.

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க இரும்பு விற்பனைநிலையமும் பலத்த சேதமடைந்தது. (39-38-ப11ஸ்ரீ)

# முல்லை. முகாமிலிருந்து கடும் ஷெல் தாக்குதல்

முல்லைத்தீவு முகாமிலிருந்து பயங்கரமாகச் ஷெல்கள் குடிமனைகளை நோக்கி ஏவப்படுகின்றன.

வட்டுவாகலிலிருந்து பி. யூ. டி. சந்தி வரை கரையோரமாக நிலைகொண்டிருக்கும் இராணுவம் முன்னேற முடியாத நிலையால் ஷெல் வீச்சுக்களை நாலா பக்கமும் ஏவி விடுகின்றது.

அடிக்கடி ஏவப்படும் ஷெல் வீச்சு, பீரங்கி வேட்டுக்களால் அப்பகுதிகள் அதிர்கின்றன.

புதுக்குடியிருப்புப் பகுதியில் உள்ள அகதிமுகாமைச் சில நாட்களுக்குமுன் பல தடவைகள் சுற்றி வந்த ஹெலி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த போதிலும் உயிர் ஆபத்துத் தவிர்க்கப்பட்டது. (38-ஸ்ரீ)

# தனியார் ஊழியர்க்கு பென்சன் திட்டம்

முப்பது இலட்சம் தனியார் துறை ஊழியர்களுக்கு நன்மை பயக்கும் திட்டம் ஒன்றை சமூகநலன் அமைச்சு தயாரித்துள்ளதென்று அமைச்சின் செயலாளர் திரு கொபடின் ட்யாஸ் தெரிவித்துள்ளார்.

இப்பென்சன் திட்டத்திற்குப் 15 வருடகாலம் பணம் செலுத்தும் ஊழியர்களுக்குக் குறைந்தது மாதம் ஒன்றுக்கு 750 ரூபா கிடைப்பதற்கு இப்பென்சன் திட்டம் வகை செய்யும்.

இதற்கான நகல் மசோதா தயாராகி விட்டதென்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

### மணலாறில்...

புலிகளின் தாக்குதலில் நாலு சிப்பாய்கள் பலியானார்கள். இதைத் தொடர்ந்து ஏனைய சிப்பாய்கள் முகாமிற்குப் பின்வாங்கினர்.

இந்தச் சம்பவம் நடைபெற்றபோது இவர்களுக்கு உதவியாக மேலதிக இராணுவம் வர முயன்றபோது இவர்கள் கண்ணி வெடியில் சிக்கியதில் பலத்த சேதத்துடன் அவர்களும் முகாம் திரும்பினர்.

இம் மோதலின்போது இராணுவத்தினரிடம் இருந்து ரி—56 துப்பாக்கிகள் — 2, ரி—81 துப்பாக்கிகள் — 2, ரவைக் கூடுகள் —14, ரவைகள் — 9090, ஜே ஆர் கைக்குண்டு —2, தலைக் கவசம் — 8, இராணுவ சப்பாத்துக்கள் — 4 சோடி, கோல்ஸர் —4, நீர்த் தாங்கி ஒன்று என்பன புலிகளால் கைப்பற்றப்பட்டன. (து)

### லொறிச்...

லும் சிப்பாய்கள் ஈடுபடுகின்றனராம்.

அண்மையில் இராணுவத்தினர் வடக்கிலிருந்து சென்ற ஓர் லொறிச் சாரதியைக் கம்பியினால் வயிற்றில் குத்திக் காயப்படுத்தி உள்ளனர். பலத்த காயமடைந்த இவர் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (ப-2)


## தவறிவிட்டது

அருளம்பலம் கௌசலாதேவி ஆகிய எனது கறுப்பு நிறக் கைப்பை ஒன்று கடந்த 08-10-90 (திங்கள்) அன்று இயக்கச்சிக்கும் சங்கத்தா வயலுக்குமிடையில் அடையாள அட்டை, பணம், கைக்கடிகாரம் உட்பட சில பொருட்களுடன் தவறிவிட்டது, தயவு செய்து இதனைக் கண்டெடுத்தவர்கள் அருளம்பலம் கௌசலாதேவி, நந்திவளை, மந்துவில், கொடிகாமம் என்ற முகவரியிலோ, அல்லது முரசொலி அலுவலகத்திலோ கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடையாள அட்டை இல: 628081581 V.

அ, கௌசலாதேவி.
10087